# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2021 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) (திருத்தச்) சட்டம்

---

*(2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*2021, ஒற்றோபர் மாதம் 29 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2021 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க,**
**இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்)**
**(திருத்தச்) சட்டம்**

[*2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச. வ.- ஒ. 27/2019*

**(25 ஆம் அத்தியாயமான) இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) கட்டளைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், வர்த்தமானியில் வெளி யிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

**2.** இதனகத்துப்பின்னர் (“முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) (25 ஆம் அத்தியாயமான) இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவில் “ஆண் ஆகவுள்ள எவரேனும் ஆள்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “எவரேனும் ஆள்” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. இருபத்தைந்தாம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவில் “ஆண் ஆகவுள்ள ஆள் ஒருவர்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஆள் ஒருவர்” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவில் “இளம் ஆள்” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தினை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத் தினை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவினைத் திருத்துதல்

" "இளம் ஆள்" என்பது பதினெட்டு வயதை அடைந்துள்ள வரும் அத்துடன் இருபத்தியிரண்டு வயதை அடையாத வருமான ஆள் ஒருவர் எனப் பொருள்படும்; என்பதுடன், "இளந்தவறாளர்" என்பது அதனது நேரொத்த கருத்தைக் கொண்டுள்ளது".

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை “பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*